**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை: திரு.S. அன்புதாசன், B.Com., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**
**2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 08 ஆம் நாள் திங்கள்கிழமை**
**பழைய அ.வ.எண். 81/2019**

**புதிய அசல்வழக்கு எண். 55/2023**
**in**
**CNR.NO.TNDG18-000694-2023**

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம் கிராமம், அய்யங்கோட்டை ஊராட்சி, அ.புதுார், கதவு எண். 3/8, பகவதியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும், மூக்கையா அவர்களின் குமாரர், இந்து வயது சுமார் 39 உள்ள சண்முகராஜா

.... வாதி

– எதிர்–

1. மதுரை 16, எஸ்.எஸ்.காலனி, 12/14, அவன்யூ தெரு என்ற முகவரியில் வசிக்கும், லேட். மொட்டையாண்டி அவர்களின் குமாரர், இந்து, வயது சுமார் 60 உள்ள M.கணேசன்

2. உயர்திரு வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலகம், ஆத்தூர், இருப்பு செம்பட்டி.

3. உயர்திரு எழுத்தர் அவர்கள், அய்யங்கோட்டை ஊராட்சி, அய்யங்கோட்டை ஊராட்சி அலுவலகம், அய்யங்கோட்டை, ஆத்தூர் தாலுகா.

4. உயர்திரு. செயற்பொறியாளர் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், வத்தலக்குண்டு.

5. உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள், ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல்.

... பிரதிவாதிகள்

இவ்வழக்கு சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தினை 1ம் பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ எந்தவித தடையோ இடையூரோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், கடந்த 08.07.2019ம் தேதி முறையான விசாரணையின்றி இவ்வழக்கு 2–ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட உத்தரவினை சட்டப்படி செல்லதக்கதல்ல என விளம்புகை செய்யும்படிக்கும் மற்றும் 3–ம் பிரதிவாதியால் இவ்வழக்கு 1–ம் பிரதிவாதியால் வீட்டு வரிரசீது ஏதும் ஏற்படுத்தக்கூடாது என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும், இவ்வழக்கு சொத்தில் வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள மின்இணைப்பினை முறையான விசாரணையின்றி 4–ம் பிரதிவாதி துண்டிக்கக்கூடாது என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியும், வழக்கின் செலவு தொகையினை வாதிக்கு, 1ம் பிரதிவாதி கொடுக்கும்படிக்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்கும் வழக்கு.

**வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 22.07.2019**
**வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 22.07.2019**

வழக்குமூலம் எழுந்த நாள் : 20.08.2003, 03.06.2019, 08.07.2019, 10.07.2019–ம் தேதிகளில் ஆத்துார் தாலுகா, அய்யங்கோட்டை அஞ்சல், அ.புதுாரில் உற்பத்தி,

<u>மதிப்பு விபரம்</u>

அ) பரிகாரத்திற்கான,

வாதியின் தாவா மதிப்பு .... ரூ. 1,000/–

அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம்

பிரிவு 27(C)ன் படி நீதிமன்றக் கட்டணம் .... ரூ.30.00/–

ஆ) பரிகாரத்திற்கான

வாதியின் தாவா மதிப்பு .... ரூ.5,000/–

அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம்

பிரிவு 25(d) –ன்படி நீதிமன்றக் கட்டணம் ..... ரூ.150.00/–

இ) பரிகாரத்திற்கான

வாதியின் தாவா மதிப்பு ..... ரூ. 1,000/–

அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம்

பிரிவு 27(C) ன் படி நீதிமன்றக் கட்டணம் ..... ரூ. 30.00/–

ஈ) பரிகாரத்திற்கான

வாதியின் தாவா மதிப்பு ..... ரூ. 1,000/–

அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம்

பிரிவு 27(C) ன் படி நீதிமன்றக் கட்டணம் ..... ரூ. 30.00/–

---------------------------------------------------

மொத்தம் = ரூ.8,000/– ரூ.240.00/–

---------------------------------------------------

இந்த வழக்கானது நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.81/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிலுவையில் இருந்து வந்த நிலையில், நீதிமன்ற அதிகார வரம்பெல்லை காரணமாக மேற்படி

வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அ.வ.எண்.55/2023 ஆக 22.07.2019 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்த நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.திருமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.பா.பாபு மற்றும் நா.தங்கபாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், பின்னிட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினர் என்று உத்தரவிடப்பட்டுள்ளார். 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை 5ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி 3 முதல் 5 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு குறிப்பாணையை தாக்கல் செய்துள்ளார். 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.M.K.ராணி அவர்கள் ஏற்கனவே முன்னிலையாகியும் , பின்னிட்டு வாதி, பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகி வாதவுரையை மேற்கொள்ளாததால், சாட்சிய, சான்றாவணங்களையும், வழக்கு கோப்பினைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1. தாவா சொத்தை பொறுத்து வாதி 1ம் பிரதிவாதிக்கும் அவரது ஆட்களுக்கும் எதிராக கோரிய **நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம்** சட்டப்படியும், பொருண்மைப்படியும் **கிடைக்கதக்கதல்ல** என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

2. 08.07.2019ம் தேதி 2ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட உத்தரவை சட்டப்படி செல்லதக்கதல்ல என்ற **விளம்புகை செய்யக்கோரிய பரிகாரம்** வாதிக்கு

சட்டப்படியும், பொருண்மைப்படியும் **கிடைக்கதக்கதல்ல** என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

3. கடந்த 08.07.2019ம் தேதி 2ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட உத்தரவினை வைத்து, 3ம் பிரதிவாதியால் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு வீட்டு வரி ரசீது எதுவும் ஏற்படுத்தக்கூடாது எனக்கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், வாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள மின்இணைப்பினை முறையான விசாரணையின்றி இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி துண்டிக்கக்கூடாது என **செயலுறுத்துக்கட்டளை** பரிகாரமும், வாதிக்கு சட்டப்படியும், பொருண்மைப்படியும் **கிடைக்கதக்கதல்ல** என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து **வாதியால் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.**

4. இருதரப்பிலும் செலவுப்பட்டியல் தாக்கல் இல்லை.

**சொத்துவிபரம்**

திண்டுக்கல் ஆர்.டி, அய்யம்பாளையம் சப்டி, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், அய்யம்பாளையம் கிராமம், அய்யன்கோட்டை பஞ்சாயத்து, வார்டு எண்.4, அ.புதூரில், நத்தம் சர்வே எண்.1748/1 நிர் ஓராயிரத்து எழுநூற்றி நாற்பத்தி எட்டு உட்பிரிவு எண் ஒன்று நிரில் சம்பந்தப்பட்டதும். வடக்குத்தெருவில், கதவு எண்கள் 3/8 நிர்கள் உடைய வீடு மற்றும் மனையிடம்.

கிழமேலடி 45,

தென்வடலடி 42–க்கு

ச.அடி.1890 அளவுள்ளது.

அதில் 629 அடியில் உள்ள கான்கிரீட் வீடும்

எஸ்.ஸி.எண்.1004 நிர் உடைய மின்இணைப்பு உள்படவும்

ஷை மனை வகையறாவுக்கு மால்:

| | | |
|---|---|---|
| அய்யனார் மனைக்கும் | ….. | கிழக்கு |
| நா.மருதமுத்து மனைக்கும் | ….. | வடக்கு |
| தென்வடல் வீதிக்கும் | ….. | மேற்கு |
| விருதுநகர் நாடார் நன்செய்க்கும் | ….. | தெற்கு |

2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 08 ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 15:40:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஆத்தூர்.

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT ATHOOR**

**பழைய அ.வ.எண். 81/2019**

**புதிய அசல்வழக்கு எண். 55/2023**

Shanmugaraja .... Plaintiff

Vs

Ganesan & 4 Others .... Defendants

| | | |
|---|---|---|
| 1. Section and Subsection | – | 27(C), 25(d) of Court Fees Act |
| 2. Nature of the Suit | – | Bare Injunction & Declaration |
| 3. Value of the suit for the Prayer | – | Rs.8,000/- |
| 4. Annual Revenue or rent payable | – | Nil |
| 5. Value for Purpose of C.F.to be paid | – | Rs.240.00/- is paid |

// By Order //

Head Clerk
DM Cum JM Court,
Athoor.